**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 08.10.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 14 (LW25)

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆயர்ராமன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A2, A3, A5, A6 ஆஜர். A1, A4, A7 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது அபிராமம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மண்டல மாணிக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, அப்போது பேபி இசக்கி பிரகதாம்பாள் என்பவர் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தார். கடந்த 14.06.2021ம் தேதியன்று 17.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது, கீழக்காக்காகுளத்தை சேர்ந்த முத்துச்சாமி மகன் முத்துராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி அன்றைய தினம் 16.00 மணிக்கு முத்துப்பாண்டி மகன்



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 14:57:00 +0530

மூர்த்தி, கோபாலகிருஷ்ணன் மகன் ரமேஷ், காந்தி மகன் ஸ்டாலின் ஆகியோருடன் கீழக்காக்காகுளம் காத்தவராயன் கோவில் விஷேசத்திற்கு பூஜை சாமான் வாங்கிக்கொண்டு கமுதியிலிருந்து கீழக்காக்காகுளம் வரும் போது, கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே ரமேஷ்குமார், வினோத்குமார் என்ற வினோத்பாண்டி, தமிழ்செல்வன், பசுபதிபாண்டியன் ஆகியோர் வழிமறித்து கீழக்காக்காகுளத்து தேவுடியா மகன்களா, உங்க ஊர் பொண்ணுங்களை பற்றி பேசினால் போலிஸில் புகார் கொடுப்பீங்களா என்று சொல்லி அடித்து, கத்தி வைத்து குத்திவிடுவதாக மிரட்டியதாகவும், போகும்போது ரமேஷ்குமார் உங்க ஊர்க்காரர்களை கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி கொடுத்த மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 112/2021, பிரிவுகள் 341, 294(b), 323, 506(i) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் இணைத்து கமுதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேல் நடவடிக்கைக்காக சார்பு ஆய்வாளர் பேபி இசக்கி பிரகதாம்பாள் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன். நான் பதிவு செய்த மேற்படி **முதல் தகவல் அறிக்கையின் நகல்தான்** தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஆகும். அது **அ.த.சா.ஆ.11** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குற்ற எண். 112/2021 சம்மந்தமாக மட்டும்தான் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், வேறு எந்த வழக்கு சம்மந்தமாகவும் என்னை விசாரிக்கவில்லை என்றால் குற்ற எண். 134/2021 வழக்கு சம்மந்தமாகவும் என்னை விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரித்த போது குற்ற எண். 134/2021 வழக்கு சம்மந்தமாக கூறப்படவில்லை என்றால் சரிதான். குற்ற எண். 112/2021 புகாரின் உண்மைத்தன்மையை அறிய நான் யாரையாவது விசாரித்து



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 14:57:07 +0530

விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் யாரையும் விசாரிக்காமல் குற்ற எண். 112/2021 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்த முத்துராஜ் என்பவரின் கையொப்பமோ, கைரேகையோ பெறப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.11ல் உண்மைச்சான்று என்று ஆய்வாளர் கையொப்பம் இட்டுள்ளதில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.த.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குற்ற எண். 112/2021 தவிர வேறு விவரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. குற்ற எண்.134/2021 ஐ பொறுத்தவரை நேரடியான புலன் விசாரணை அதிகாரியாகவோ, வழக்கு பதிவு செய்த அதிகாரியாகவோ நான் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.08 14:57:12 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .